

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.02.2026) அண்ணா அறிவாலயத்தில், திராவிடத் தமிழர் கட்சியின் தலைவர் சி.வெண்மணி சந்தித்து, கோவையில் 15.02.2026 அன்று நடைபெறவுள்ள "திசை காட்டும் திராவிடம்" அரசியல் மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன், மாநில இணைப் பொது செயலாளர் ஈரோடு பொன்னுசாமி, தலைமை நிலைய செயலாளர் பேறறிவாளன், கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.2.2026) புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஹாக்கி யூனிட் ஆப் தமிழ்நாடு நிர்வாகிகள் தலைவர் சேகர் ஜே மனோகரன் தலைமையில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் பொதுச் செயலாளர் முனைவர் பி.செந்தில் ராஜ்குமார், பொருளாளர் முனைவர் க.சேவியர் ஜோதி சற்குணம், துணைத்தலைவர்கள் வினோத் காந்தி, எஸ்.திருமாவளவன் மற்றும் இணை செயலாளர் எல்.கிளமண்ட் லூர்துராஜ் ஆகியோர் உள்ளனர்.

## ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் – துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து –

# தமிழ்நாடு முழுவதும் நாளை மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நடைபெறுகிறது!

**சென்னை, பிப்.11 -**

**ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் - அதற்கு ஒத்து ஊதி துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில், நாளை (பிப்ரவரி 12 - வியாழக்கிழமை) தமிழ்நாடு முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.**

**இந்த ஆர்ப்பாட்டம் குறித்து - மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-**

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து தமிழ்நாட்டின் அனைத்து மாநகரங்களில் தலா ஒரு இடத்திலும் மற்றும் கழக ஒன்றியம், நகரம், பேரூர் அளவிலும் நாளை (**12.02.2026 - வியாழக்கிழமை) காலை 10.30 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி** சார்பில் "**மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்**" நடைபெறும்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி ரூ.3458 கோடி, நூறு நாள் வேலை திட்ட நிதி ரூ.2000 கோடி, குடிநீர் இணைப்பு திட்ட நிதி ரூ.3,112 கோடி உள்ளிட்ட எந்த நிதியையும் விடுவிக்காமலும் வளர்ச்சி திட்டத்திற்கு ஒரு பைசா கூட ஒதுக்காமலும், தமிழ்நாட்டு மக்களைப் புறக்கணித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

தமிழ்நாட்டிற்கான நிதியும் இல்லை வளர்ச்சித் திட்டமும் இல்லை என ஒன்றிய அரசு கைவிரித்த போதும் அவர்களது காலில் விழுந்து ஆதரித்துள்ளது அடிமை அ.தி.மு.க.

நிதி மறுப்பு ஒருபுறம் என்றால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, நூறு நாள் வேலையையே இனி இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சட்டத்தை திரும்பப்பெறவோ, அதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவோ செய்யாமல் ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அதோடு அமெரிக்காவின் விவசாயம் சார்ந்த பொருட்களை இங்கே இறக்குமதி செய்து விற்க ஒப்புக்கொண்டு நமது விவசாயிகளின் வாழ்வையே கேள்விக்குறியாக்கி உள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

ஒரே நேரத்தில் 100 நாள் வேலை ஒழிப்பு சட்டம், விவசாயத்தை அழிக்கும் ஒப்பந்தம் என கிராமப்புற மக்கள் மீது இரட்டை அணுகுண்டு தாக்குதல் நடத்தி உள்ளது ஒன்றிய பாஜக அரசு. இதற்கு உறுதுணையாக இருந்து துரோகம் செய்து வருகிறது அ.தி.மு.க.

நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம், புது புது சட்டங்கள், ஒப்பந்தங்கள் வழியே மக்களை வஞ்சிப்பது, நம் வளர்ச்சியைத் தடுத்து வீழ்ச்சியில் தள்ள துடிப்பது என அநீதி இழைத்து வரும் ஒன்றிய பா.ஜ.க.வை எதிர்த்தும், அதோடு கூட்டு சேர்ந்து டப்பா எஞ்சின் மூலம் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களையும் டெல்லியின் அடிமையாக்கத் துடிக்கும் அடிமை அ.தி.மு.க.வைக் கண்டித்தும் **மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் அனைத்து மாநகரங்களிலும் தலா ஒரு இடத்திலும் மற்ற இடங்களில் கழக நகர, ஒன்றிய, பேரூர் அளவிலும் கண்டன ஆர்ப்பாட்டம்** நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருடன் இணைந்து மாவட்டச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

இவ்வாறு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாளை ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

## சேலம் மாவட்டத்தில்

# 5,240 தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்ட விரிவாக்கம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், பிப். 11 -

முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலம், சந்திர மஹால் திருமண மண்டபத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவினை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளதாவது: -

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் மகளிர், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில் முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களின் நலன் காத்திடும் வகையில் இன்றையதினம் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்துள்ளார்.

அதனைத்தொடர்ந்து சேலம் மாவட்டம் முழுவதும் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் 5,240 தூய்மை பணியாளர்கள் இக்காலை உணவு வழங்கும் திட்டத்தில் பயன்பெறுகின்றனர்.

சேலம் மாநகராட்சி சூரமங்கலம், அஸ்தம்பட்டி, அம்மாப்பேட்டை, கொண்டலாம்பட்டி ஆகிய 4 மண்டலங்களில் 3,000 தூய்மைப் பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். அந்த வகையில் சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்கு GVN திருமண மண்டபத்திலும், அஸ்தம்பட்டி மண்டலத்திற்கு தெய்வீகம் திருமண மண்டபத்திலும், அம்மாபேட்டை மண்டலத்திற்கு செங்குந்தர் திருமண மண்டபத்திலும், கொண்டலாம்பட்டி மண்டலத்திற்கு சந்திர மஹால் திருமண மண்டபத்திலும் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கி இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று சேலம் மாவட்டத்திற்குட்பட்ட ஆத்தூர், மேட்டூர், எடப்பாடி, நரசிங்கபுரம், தாரமங்கலம், இடங்கணசாலை மற்றும் சங்ககிரி ஆகிய நகராட்சிகளில் பணிபுரியும் 1,123 தூய்மை பணியாளர்களும், சேலம் மாவட்டத்திற்குட்பட்ட 30 பேரூராட்சிகளில் பணிபுரியும் 1,117 தூய்மைப் பணியாளர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர்.

இவ்வாறாக சேலம் மாவட்டம் முழுவதும் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் 5,240 தூய்மை பணியாளர்கள் இக்காலை உணவுத்திட்டத்தில் பயன் பெறுகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா. இளங்கோவன், கொண்டலாம்பட்டி மண்டல குழுத் தலைவர் அசோகன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் இருக்கும் குறைபாடுகளைத் தீர்க்க

# ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.11-

பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) திட்டத்தில் இருக்கும் குறைபாடுகளை CAG எனப்படும் தலைமை கணக்குத் தணிக்கையாளர் அவரது விரிவான அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதை தொடர்ந்து, அதனை தீர்ப்பதற்காக ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்றும், அத்திட்டத்தின்படி திறன் மேம்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை உறுதி செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்பது உள்ளிட்ட பல கேள்விகளை நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர்



துறை அமைச்சருக்கு திமுக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி. எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு :-

பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா திட்டத்தின் பயனாளிகளுக்கு வேலை வாய்ப்பு குறைபாடு, தகுதி விதிமுறைகளை மீறுதல், பயனாளிகளின் நகல் பதிவுகள், பயிற்சி மையங்களை மூடுதல் மற்றும் பல வீனமான கண்காணிப்பு உள்பட திட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளை, CAG அறிக்கையில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளதா? அப்படியானால் அதன் விவரங்களை மாநில வாரியாக தெரிவிக்கவும்.

அத்திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படாத நிதி மற்றும் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் குறித்து அறிக்கையிடப்பட்டுள்ளதா? அப்படியானால், அதற்கான காரணங்கள் என்ன?

திட்டத்தைச் செயல்படுத்தும் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) மற்றும் மாநிலத் திறன் மேம்பாட்டு இயக்கங்கள் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு அரசு ஏதேனும் பொறுப்பை நிர்ணயித்துள்ளதா? அப்படி இருந்தால் அதன் விவரங்கள் என்ன?

இத்திட்டத்தில் தற்போதைய மற்றும் எதிர்கால கட்டங்களில் வெளிப்படைத்தன்மை, சிறந்த நிதி பயன்பாடு, நம்பகமான பயனாளி தரவுகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வேலைவாய்ப்புகளை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்திருக்கும் அல்லது எடுக்க திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.




முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு திருப்பூர் மாவட்டம், காங்கேயம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் கூடுதல் படுக்கைகளுடன் கூடிய கூடுதல் கட்டடத்தினை திறந்து வைத்ததை தொடர்ந்து அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் மருத்துவமனையை பார்வையிட்டார். இதில் அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், நகரச் செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், நகர இளைஞர் அணி அமைப்பாளர் சூரியபிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் மருத்துவ உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



முதல்வர் அவர்கள் திருவள்ளூரிலிருந்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை காணொலிக் காட்சியின் வாயிலாக தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டம், கொண்டலாம்பட்டி மண்டலம் சந்திர மஹாலில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.